# TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

No.19-A Rukmini Lakshmipathy Salai, ( TIDCO Complex),
Egmore,Chennai – 600 008
Phone No. 28411376, 28411378, 28411379. Fax : 28411377
email: tnercmail@gmail.com Website: www.tnerc.gov.in

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதிகள்/**

**(NCES Regulations )/ 16 / 2, 1/12/ 2008 ஆம் நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

---

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 81(1) (e)பிரிவுடனும், மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61 (h) பிரிவின்படி, 2008 பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின் திறன் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் அது, இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகை செய்யும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியிடுகை செய்யப்பட்டுள்ளபடியாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86 (1) (e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61 (h) பிரிவின்படி

வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 08.02.2008 நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/ மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி/ 16/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 27.02.2008 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2ல் வெளியிட்ட 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளிலிருந்து மின்கொள்முதல் செய்வதற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளை செய்கிறது.

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் (முதலாம் திருத்தம் ) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

b) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து மின்கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :

2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து மின்கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம்

ஒழுங்குமுறைவிதியின் (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் வரம்புரைகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

“ ஆனால், ஏதேனும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரத்தின் அடிப்படையில் மின் உற்பத்தியாளரால் மின்பகிர்வு உரிமம்தாரருக்கு முழுமையாக மின்சக்தியை விற்பனை செய்வதைப் பொறுத்தவரை, இடையிணைப்புமுனைவரை இடைத்தள மின்தொடர்களின் செலவு (cost of interfacing lines upto the interconnection point ) மா.மி.செ.ப.நி.(STU) / மின்பகிர்வு உரிமம்தாரரால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் :

ஆனால் மேலும், மேற்சொன்ன மின்பகிர்வு உரிமம்தாரருக்கு விற்பனை செய்யப்படுவதற்கு ஒத்துக் கொண்டு அத்தகைய மின்சக்தியைப் பயன்படுத்துவதற்கு மேற்சொன்ன உரிமம்தாரர் முடிவு செய்து அதில் குறிப்பிடப்பட்ட மின்பகிர்வு உரிமம்தாரருடன் மின்கொள்முதல் உடன்பாட்டில் குறிப்பிடப்பட்ட காலஅளவு முடிவடைவதற்கு முன்பு தம்முடைய சுய உபயோகத்திற்காக அல்லது மூன்றாம் தரப்பினருக்கு அல்லது மேலே குறிப்பிடப்பட்ட மின்பகிர்வு உரிமம்தாரர் அல்லாத பிற மின்பகிர்வு உரிமம்தாரருக்கு, அத்தகைய மின்சக்தியை விற்பனை செய்வதற்காக, மேற்சொன்ன மின்பகிர்வு உரிமம்தாரருக்கு விற்பனை செய்யப்படுவதற்கு ஒத்துக் கொண்டு அத்தகைய மின்சக்தியைப் பயன்படுத்துவதற்கு முடிவு செய்து மேற்சொன்ன மின்பகிர்வு உரிமம்தாரர் முழு மின்சக்தியையும் விற்பனை செய்வதற்காக அதில் குறிப்பிடப்பட்ட மின் பகிர்வு உரிமம்தாரருக்கு, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரத்தின் அடிப்படையில் முதலாம் வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள மின் உற்பத்தியாளர் மின்கொள்முதல் உடன்பாட்டினை எழுதிக்கொடுத்துள்ளவிடத்து, அப்போது, அவர், தம்முடைய சுய உபயோகத்திற்காக அல்லது மூன்றாம் தரப்பினருக்கு அல்லது அவரால் எவருக்கு மின்கொள்முதல் உடன்பாடு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த மின்பகிர்வு

உரிமம்தாரர் அல்லாத பிற மின்பகிர்வு உரிமம்தாரருக்கு தம்முடைய சுய உபயோகத்திற்காக அல்லது விற்பனைக்காக மின்சக்தியைக் கொண்டு செல்வதற்கு முன்பு அத்தகைய மின்கொள்முதல் உடன்பாடு எவருக்கு அவரால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த மின்பகிர்வு உரிமம்தாரருக்கு இடைத்தள மின்தொடரின் முழுச் செலவையும் ஈடு செய்வதற்கு அவர் கட்டுப்பட்டவர் ஆவார்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்